# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai.

**CC.NO. 235/2022**

Deposition of LW9 Examined as PW 6 Date: 12.05.2026

| | |
|---|---|
| Name | விஸ்வநாதன் |
| Father's Name | ஆறுமுகம் |
| Village | திருவாடுதுறை |
| Taluk | குத்தாலம் |
| Age | 73/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 12.05.26

(A1, A2 Absent. Petition filed U/s. 355 BNSS and allowed)

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து திருவாடுதுறை ஆதினத்தில் கணக்காளராக இருந்து வருகிறேன். அ.சா.1 யை எனக்கு தெரியும். அவரும் என்னுடன் ஆதினத்தில் வேலை செய்து வந்தார். எதிரிகளை எனக்கு தெரியாது. அ.சா. 1 ன் வீட்டில் நடந்த திருட்டு சம்பந்தமாக ஒரு வருடம் கழித்து ஒரு நாள் குத்தாலம் போலிசார் என்னை காவல் நிலையத்திற்கு வரச் சொல்லி விசாரித்தார்கள். நானும் அ.சா. 1 ம் காவல் நிலையத்திற்கு சென்றிருந்தோம். அப்போது எதிரிகள் இருவரையும் போலிசார் அடையாளம் காட்டி அவர்கள் தான் அ.சா.1 ன் வீட்டில் திருடியதாக கூறினார்கள். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். **(அது அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். **(அது அ.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

திருட்டு சம்பவத்தை நான் நேரிடையாக பார்க்கவில்லை என்றால் சரிதான். அ.சா. 1 எனது நண்பர் என்பதால் அவருக்கு சாதகமாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் என் முன்னிலையில் எதிரிகளிடமிருந்து நகைகள் ஏதேனும் கைப்பற்றினார்கள் என்றால் இல்லை. போலிசார் காவல் நிலையம் வரவழைத்து என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

என்னால் எழுதிக் கொள்ளப்பட்டு, எதிரி யின் முன்னிலையில் ..., திருப்பி படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண் I

மயிலாடுதுறை

12/5/26